உ

ஸ்ரீவாணீ சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை கூ. { 1918-ம் ஆ செப்டம்பர் மீ } இதழ் கூ.

தமிழ்ச் செய்யுள்.

தமிழில் உரைநடை, செய்யுள்நடை என இருவகை நடையுண்டு. வடநூலாரும் அவற்றைக் கத்தியரூபம், பத்தியரூபம் என வழங்குவர். அவற்றுள் உரை நடையானது அவரவர் விருப்பம்போல் சொற்களைப் பிரித்து எழுதக்கிடக்கும். அதனால் எவ்வகைக் குறைபாடும் உண்டாதலில்லை. ஆதலின் அதைப்பற்றி இப்போழ்து யாம் பேச வரவில்லை. செய்யுள் நடையைப் பற்றியே சிறிது பேசுகின்றோம்.

செய்யுளாவது அதற்கேற்பட்ட இலக்கணத்தின்படி சீர், தளை முதலியன பிழையாமல் ஓசை யின்ப முடையதாகப் புலவர்கள் அழகுபெறப் பாடும் பாட்டு என்பதை அறிஞரெவரும் அறிவர். சீர், தளை முதலியன கெட்டால் அது செய்யுளே யாகாது.

அத்தகைய செய்யுட்களினாலேயே நமது அரிய பெரிய நூற்களெல்லாம் அமைந்து கிடக்கின்றன. செய்யுட்களே நம் செந்தமிழின் பெருமையைத் தெரிப்பவை. செய்யுள் நடையி

லமைந்துள்ள நூற்களை ஆசிரியரிடம் முறையே கேட்டு முட்டறப் பொருள் தெரிந்துகொள்வது ஆன்றோர் வழக்கு.

அங்ஙனமாக, இப்போழ்து ஆன்றோர் செய்யுட்களை அச்சிடுபவர் சிலர், அச்செய்யுட்களைப் பல இடங்களில் பிரித்து அவற்றின் அழகையும் அருமை பெருமைகளையும் கெடுக்கின்றனர். உதாரணமாக ஈண்டு ஒரு பாட்டைக் காட்டுவேம்:

"செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வா(று) அமுதாக்கலும் ஆகும்; மற்(று)
அல்ல(து) ஒன்(று) அறியேன்" என்(று) அயர்வுற"

இது 1919 ஆண்டு மெட்ரிகுலேஷன் (Matriculation) தமிழ் டெக்ஸட் (Text) புத்தகத்தில் இளையான்குடி மாறநாயனார் புராணம் 13-வது செய்யுள்.

இச்செய்யுளின் முன்னிரண்டடி ஒருவாறு கிடக்கட்டும். பின்னிரண்டடியைப் பார்க்க மனம் வருந்துகின்றது. இங்ஙனம் எழுதுவதால் செய்யுளழகே கெட்டுப்போகின்றது. செய்யுளுறுப்பாகிய சீர், தளை முதலியன சிதைகின்றன. ஓசையின்பம் ஒழிந்தே போகின்றது. பாடப்படுவதன்றோ பாட்டு! இதனை எங்ஙனம் பாடுவது? இன்னும் பல்வகைச் சந்தங்களில் அமைந்துள்ள பாக்கள் இங்ஙனம் சிதைக்கப்பட்டால் அவற்றின் போக்கு என்னவாகும்?

"வல்ல வா(று) அமுதாக்கலும் ஆகும்; மற்(று)
அல்ல(து) ஒன்(று) அறியேன்" என்(று) அயர்வுற"

இவ்வடிகளை இருக்கவேண்டிய முறைப்படி இவற்றின் கீழ் எழுதுகின்றேம்.

"வல்ல வாறமு தாக்கலு மாகுமற்
றல்ல தொன்றறி யேனென் றயர்வுற"

இவ்விரண்டையும் அறிஞர் படித்துப் பார்க்கட்டும். படிக்கவும் பார்க்கவும் வெறுப்புண்டாமாறு செய்யுள் சிதைக்கப்பட்டுள்ளது என்பதை எவர் மறுக்கமுடியும்?

மேலும் இது பள்ளியிற் பயிலும் பிள்ளைகளுக்கென்றே சென்னைச் சர்வகலா சங்கத்தாரால் (University) அச்சிடப்பட்ட

புத்தகம். இதில் தலைவிரிகோலமாகக் காணப்படும் செய்யுட்களைப் பெரியோர்களே படிக்க இடர்ப்படுகின்றார்கள் என்றால், பிள்ளைகள் எங்ஙனம் படித்துப் பயன்பெறுவது?

இங்ஙனம் செய்யுட்களை அழகுகெடப் பதம்பிரித்து அச்சிடுவது, ஒரு அழகிய பாவை, கைவேறு, கால்வேறு, கண்டம் வேறாகத் துண்டிக்கப்பட்டுக் கிடப்பதுபோ லிருக்கிறது—என்று சின்னாண்முன்னர், தேசபக்தனில் அதன் ஆசிரியர் எழுதியிருந்தது எமக்கு நினைவிற்கு வருகிறது. அவர் அங்ஙனம் கூறியது சாலப் பொருத்தமுடையதென்று ஒருமுறையன்று பன்முறையும் பகர்வேம்.

அன்றியும் ஆன்றோர் செய்யுட்கள் சிலவிடங்களில் பல வகையாகப் பிரிக்கப்பட்டு அரும்பொருள்கள் பல கொள்ளக் கிடக்கும். பதம் பிரித்து அச்சிடுவதென்றால் அவ்விடங்களில் ஒரு வகையாற்றானே பிரிக்க இயலும். அப்போழ்து மற்றைப் பொருள்களெல்லாம் அறிய முடியாமற் போவதுமன்றி, அங்ஙனம் செய்யுட்கள் அமைந்துள்ள அருமைப்பாடும் தெரியாமற் போகின்றது.

இனி "நூலாசிரியர்கருத்து ஒருவகையாகத்தானே யிருக்கும், அதனைப் பலபடப் பிரித்தல் எதற்கு?" என்று கூறுவர், பதம்பிரித்து அச்சிடுதலை ஆதரிக்கும் சிலர். அவர் தாம் பயின்ற பிறநாட்டு மொழிகளைப்போலவே நம் மொழிகளையும் நினைத்து விட்டவராவர். அது தவறு. நமது மொழிகளின் அருமை பெருமைகளை அவர் நினைத்துப் பார்த்தல் வேண்டும். இரண்டு பொருள்பட ஒன்றைச் சொல்லிவைத்தலாகிய இரட்டுறமொழிதல் என்னும் உத்தியையும், பலபொருள் அமையுமாறு செய்யுள் அமைத்தலாகிய சிலேடையணி முதலியவற்றையும் அவர் அறியார்போலும்!

மேலும் சில விடங்களில் பலவகையாகப் பிரித்துப் பல பொருள் கொள்ளக் கிடக்கும் போது, அச்சிடுபவர் பிரித்துக் கொண்ட பொருள்தான் நூலாசிரியர் கருத்து என்பதை எப்படி

உறுதிப்படுத்தமுடியும்? ஆதலின் செய்யுட்களைப் பதம்பிரித்து அச்சிடுவதில் பல நன்மைகளை யிழக்க நேரிடுகின்றது என்பதை யாம் சொல்லவும் வேண்டுமோ! இது தமிழ்ப் புலவர்கட்குப் பெரிதும் மனவருத்தத்தை யுண்டுபண்ணுகின்ற செயலாகும். நிற்க.

இங்ஙனம் செய்யுட்களைப் பதம் பிரித்து அச்சிடுபவர்களின் நோக்கம் கெட்டதென்று யாம் சொல்லவில்லை. அது நன்னோக்கமே யாகும். செய்யுட்களில் சில சந்திகளைப் பிரித்து விட்டால் யாவரும் எளிதில் படித்துப் பொருளுணரக் கூடும் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். அந் நல்லெண்ணத்திற்கு மட்டும் நாம் நன்றி செலுத்துவோம். ஆனால் அவ்வெண்ணம் அதனால் பயன்பெறுதென்பது திண்ணம். பதங்களைப் பிரித்துவிட்டது கொண்டே ஒருவன் ஒருநூலின் பொருளை அறிந்து கொள்வதென்பது அனுபவ விரோதமாதலின், அது முடியாத காரியமென்றுணர்க. அறிவுடையவர் ஒருவகையால் பொருளுணர்தற்கு உதவியாகுமெனின், பொருளுணரக்கூடிய அறிவுடையவர் பதம் பிரிக்கும் வன்மையுடையவ ராகாரோ? அதனால் பல நன்மைகளை இழப்பானேன்?

ஆதலின், ஆன்றோர் தமிழ்ச்செய்யுட்களை அச்சிடுகின்ற அறிஞர், கவிகளின் கருத்துக் கெட, செய்யுட்களைச் சிதைத்து, அவற்றின் அழகைக் கெடுத்து, தமிழ்ப்புலவர் நெஞ்சத்தைப் புண்படுத்தாமல், செய்யுட்களைச் செய்யுட்களாகவேயிருக்குமாறு அச்சிட்டு உலகிற்கு நன்மைபுரியும்படி அவர்களைப் பன்முறையும் வேண்டுகின்றோம்.

பெரிதும் ஆங்கிலம்முதலிய பிறநாட்டுமொழிகளைப் பயின்றவர்களாலேயே இத்தகுதியற்றமுறை மேற்கொள்ளப்படுகின்றது என்று தெரிதலின், பரீட்சைக்குத் தமிழ் டெக்ஸ்ட் (Text) புத்தகங்களை அச்சிடுவதற்கு, ஆங்கிலம் முதலிய பிறமொழிகளை மட்டும் படித்துப் பட்டம் பெற்றவர்களை நியமிக்காமல் தமிழ்ப்புலமை நிரம்பியவர்களை நியமித்துத் தமிழை ஆதரிக்குமாறு அரசாங்கத்தினரையும் வேண்டுகின்றோம்.

தமிழ்ப்பண்டிதர்களே! தமிழை வளர்க்க எழுந்த சங்கத்தவர்களே! அமிழ்தினும் இனிய நம் தமிழணங்கு, இங்ஙனமெல்லாம் இடர்ப்படுவதை நீங்கள் பார்த்துக்கொண்டிருப்பது உங்கட்கு அழகேயோ! வடமொழிச் சுலோகங்கள் இங்ஙனம் தமிழ்க் கவிகள் போலச் சிதைக்கப்பட்டால், வடநூல் வல்லுநர் வாளா இருப்பரோ? பாஞ்சாலிக்கு மானக்கேடுற்றபோது தருமர் கொண்ட பொறுமை இக்காலத்து நமக்கு வேண்டா. தமிழ்க்குக் கேடுபயக்கத்தக்க இன்னோரன்ன தகுதியற்ற செயல்களை அப்போதைக்கப்போதும் கண்டித்துத் தடுக்க முயலுங்கள் முயலுங்கள்.

குறிப்பு.—இதுபற்றிய வியாசங்கள் இப்போழ்து பெரிதும் வேண்டற்பாலன. தமிழ்ப் பண்டிதர்கள் எத்தனை வியாசங்கள் எழுதியனுப்பினும் உடனே அவைகளைப் பிரசுரிப்போம்.

ப—ர்.

பம்பாய் சுரமென்னும் கொள்ளைக் காய்ச்சலும் அது அணுகா விதிகளும்.

(பண்டிதர் S. S. ஆநந்தம்பிள்ளையவர்கள் நமக்கனுப்பியது)

இக்காய்ச்சல் காற்றில் கலந்துள்ளது. மனிதர் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது காற்றேயென்பது யாவரும் அறிந்த விஷயம். தற்காலம் மனிதர்களைப் பீடித்திருக்கும் விஷ சுரம் காற்றிலுள்ள விஷப்பொருளால் ஏற்பட்டுள்ளது. இந் நச்சுக் காற்று உண்டானதற்குக் காரணம் எதுவாயிருந்தாலும் இந்தியாவின் வடமேற்கிலிருந்து இது வந்ததாகத் தெரிகிறது. இது பம்பாய் நகரில் தோன்றி அநேகரைப் பற்றித் தற்காலம் சென்னை நகரிலும் மற்ற ஊர்களிலும் பரவி அதிக மரணத்தை விளைக்கின்றது. சில நாட்களுக்கு முன் மாலை 5-மணிக்கு மூடுபனி போன்ற ஒருவகைப் புகை ஏற்பட்டு இரவு 9-மணிவரையில், சென்னை நகரின் வீதிகளிலுள்ள மின்னொளி விளக்குகளும் முங்க எதிரில் வந்த மனிதர்களைக் கூடப் பார்க்க முடியாதபடி தீப்புகையினால் உண்டாகும் கண்ணெரிச்சல்போல மூச்சு விடுவதற்குச் சிரம சாத்தியமாயிருந்த விஷயம் அநேகர் அறிந்திருக்கலாம். அது முதல் வெய்யிலின் கொடுமை அதிகரித்து மழையின்றிக் கொள்ளைக் காய்ச்சலும் விருத்தியடைந்து அதிகமான மனிதர்களைத் துன்புறுத்தி மடியச் செய்துவருகின்றது.

இந்நோய்க்குக் காரணமாகிய நச்சுக்காற்று எல்லாருடைய உடலிலும் கலந்தாலும் உடல் நிலைக்குத் தக்கபடி சிலருடைய தேகத்தில் வாத பித்த ஐயமென்னும் மூன்று பொருள்களையும் முறையே அதி சீக்கிரத்தில் அளவுகடப்ப விகாரப்படுத்தி உடலை அழிக்கின்றது. இம்மாதிரி நோய்கள் பெரும்பாலும் தாழ்ந்த வகுப்பாரையே அதிகமாக வருத்துகின்றன. அதற்குக் காரணங்கள் அவர்கள் வசிக்கும் இடம், உண்ணும் உணவு, உடுக்கும் உடை முதலியவை அசுத்தமாயிருப்பதும், நோய்கண்டதும் மருத்துவர்களிடம் ஆலோசித்து மருந்து முதலிய பரிகாரங்களைச் செய்துகொள்ளாமலிருப்பதும், அம்மைக் காய்ச்சல் என்று அதற்கு மருந்துண்ணக்கூடாதென்னும் அறியாமையான எண்ணங் கொண்டிருப்பதுமேயாகும். இந்நோய் ஆரம்பத்தில் வாதத்தை மிகுத்து, கை கால் இடுப்பு தலை முதலிய இடங்களில் வலியை உண்டு பண்ணுகின்றது. அடுத்துப் பித்தத்தை மிகுத்து மனக் குழப்பத்தை உண்டுபண்ணி நாவின் சுவையைக் கெடுத்துக் கண்ணெரிவும் காய்ச்சலும் அதிகரிக்கச் செய்கின்றது. முன்னமே நச்சுக் காற்றைச் சுவாசித்து அழற்சி அடைந்திருக்கும் சுவாசாசயம் அதி சீக்கிரத்தில் கபத்தின் மிகுதியால் சீதள மடையத் தேகம் அழிகிறது. ஆதலால் இந்நோய் **திரிதோஷ கோபநோய்** என்று வைத்தியநூலில் சொல்லப்படுகிறது. ஆகையால் இவ்வளவு சீக்கிரம் திரிதோஷங்களை மிகுத்துக் கொல்லும் விஷநோய்க்குத் தக்கபடி நாம் முன் ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டியது அவசியம். கால், கை, இடுப்பு முதலான விடங்களில் நோய் கண்டவுடன் மலத்தைக் கழித்து வாயுவைக் கண்டிக்கும்படியான மருந்துகளை உண்ணவேண்டும். ஆரம்பத்திலேயே கவனித்து மருந்து சாப்பிட்டு ஓய்வெடுத்துக்கொண்டால் தப்பித்துக் கொள்ளலாம். காய்ச்சல் முற்றிலும் நீங்குகிறவரையில் சோற்றுக் கஞ்சியைத் தவிர வேறொன்றும் கொடுக்கக்கூடாது. கொஞ்சம் பால் சேர்த்துக்கொள்ளலாம் நோயாளி கொஞ்சமும் பயப்படக்கூடாது. வாயினால் மூச்சு விடக்கூடாது. அருகிலிருக்கும் மற்றவர்களும் நோயாளியைப் பய முறுத்தக்கூடாது. நோயினால் இறந்தவர்களைப் பற்றி நோயாளி கேட்கும்படி ஒருவரும் முணுமுணுத்துப் பேசவும் கூடாது. எக்காலத்தும் இறந்தவர்களைச் சங்கு முழக்கம், கொட்டு முழக்கம், பறை முதலிய வாத்திய ஒலி, வாய்ச்சத்தம் இவையின்றிக் கொண்டுபோக வேண்டியது. நோயாளியின் அருகிலிருப்பவர்கள் அந்நோயாளிக்குத் தைரியத்தையும் சந்தோஷத்தையும் கடவுள் சிந்தனையையும் உண்டாக்கவேண்டும். நோயுற்றவன் உள்ள அறையில் நல்ல காற்றுலாவும்படி பலகணிகளைத் திறந்து வைக்கவேண்டியது. நன்மணங் கமழும் சாம்பிராணி, தசாங்கம், மட்டிப்

பால் முதலிய புகைகளி லேதாவதொன்றைக் காலை மாலை போட வேண்டியது. நோயாளியின் உடைகள், படுக்கை, விரிப்பு முதலியவை களை அன்றாடம் சுத்தம் செய்து வெய்யிலில் காயவைத்து மாற்றிப் போடவேண்டும். நோயாளியை உபசரிக்கிறவர், வைத்தியர் ஆகிய இரு வர் தவிர மற்றவர்கள் அவசியமின்றி நோயாளியிடம் செல்லக்கூடாது. பிணியாளியின் வாந்தி மல மூத்திராதிகளை உடனுக்குடன் அப்புறப் படுத்திச் சுத்தியாக்கவேண்டும்.

பொதுவிதிகள்.

தொற்று நோய்களும் கொள்ளைக் காய்ச்சலும் ஏற்பட்டுள்ள காலத்தில் அதிகம் உண்ணல், பசியில்லாத காலத்தில் எக்காரணத்தாலும் உண்ணல் கூடா. பசியோடிருத்தலும், அவசரமாக உண்ணலும் ஆகா. ஓட்டல்களில் காபி, பலகாரம், சோறு முதலியவைகள் உண்ணல் ஆகாது. எக்காரணத்தாலும் இரவில் நெடுநேரம் கண்விழித்தலும், கதை, கால க்ஷேபம், கூத்து, பயாஸ்கோப் முதலிய வேடிக்கைகளுக்குச் செல்லலுங் கூடாது. காய்ச்சாத தண்ணீரைக் குடிக்கவே கூடாது. ஒருவரோ டொருவர் நெருங்கி உட்காரும்படியான ட்ராம் வண்டி, ரயில் வண்டி களில் அவசியமின்றி யாத்திரை செய்யக்கூடாது. காலுக்குச் செருப்பு, சோடு முதலிய பாதுகைகளின்றி வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. நல்ல காற்றும் வெளிச்சமு மில்லாத வீடுகளில் வசித்தல்கூடாது. இரவு முழுவதும் ஒரே படுக்கையில் பலர் சேர்ந்து படுக்கக்கூடாது. நாளைக்கு இரண்டு வேளை கழுவாததும் சுத்தப்படுத்தாததுமான கக்கூசுகளில் மல சலம் கழிக்கக் கூடாது. கக்கூசுகளில் அவரவர் கழித்த மலத்தைச் சாம்பலாலேனும் மண்ணாலேனும் மூடி வரவேண்டும். இவ்வாறு செய்வ தற்கு ஒவ்வொரு வீட்டுக் கக்கூசுகளிலும் கக்கூசுகளின் ஒருபக்கத்தில் ஒரு கூடையில் சாம்பலாவது மண்ணாவது வைத்துக்கொண்டு அதனுடன் ஓர் அகப்பையாவது கொட்டாங்கச்சியாவது வைத்திருக்கவேண்டும்.

இறைச்சி முதலான வகைகளை அதிகம் உண்ணக்கூடாது. வெற் றிலை, பாக்கு, புகையிலை, பொடி, சுருட்டு, சிகரெட், பீடி முதலியவை களை உபயோகிக்கக் கூடாது. மயக்கந் தரும் குடி வகைகள் கூடா.

சென்னையில் வீடுகளில் கக்கூசுகளைச் சுத்தஞ் செய்கிறவர்கள் மலத்தை எடுத்து அதற்கேற்பட்டுள்ள வண்டிகளில் கொண்டுபோய்க் காலத்தில் சேர்க்காமல், கக்கூசுகள் கழுவுகிறதற்கு வைத்துள்ள தண் ணீரை விட்டுச் சாக்கடைகளில் தள்ளிவிடுதல், அல்லது வீதிகளில்

கொட்டி விடுதல், குப்பைத் தொட்டிகளில் கொட்டி விடுதல் முதலிய செய்கைகளைச் செய்கிறார்கள். அவற்றை அறவே நீக்கவேண்டியது.

வீடுகளில் சேரும் குப்பைகளையும் எச்சில் இலைகளையும் குப்பைத் தொட்டிகளில் போடவேண்டும்; தெருச்சாக்கடைகளில் போடுவதை நீக்கவேண்டியது.

எப்போதும் வாயைத் திறந்துகொண்டிருப்பதும் தூங்கும்போது வாயினால் மூச்சு விடுவதும் கூடா.

தெருக்களில் நடந்து செல்லும்போது ஓயாமல் மற்றொருவருடன் பேசிக் கொண்டே போகக்கூடாது.

சோறு உண்ணும்போது நீர் குடித்தலும் குடிக்கும்போது உண்ணலும் ஆகா.

கால், கை, முகம் கழுவினால் அவற்றைத் துணியால் உடனே ஈரம் போகத் துடைக்காம லிருக்கக்கூடாது.

காலை எப்போதும் சூடாக வைத்துக் கொள்ளவேண்டும். ஈரத்தில் நடமாடக்கூடாது.

தினம் காலையில் அவரவர் தம்தம் உடல் நிலைக்குத்தக்கபடி தண்ணீரிலோ வெந்நீரிலோ தலை முழுகிக் கடவுளை வணங்கவேண்டும். மாலையிலும் கூடிய வரையில் தேக சுத்தி செய்யவேண்டும். நாடோறும் கடவுளைத்தொழுது, பிராணாயாம அப்பியாசத்தைத் தெரிந்து அதனைக் காலை மாலை செய்து வரவேண்டும்.

எப்போதும் நல்ல எண்ணங்களையே மனதில் நினைக்கப் பழகல் வேண்டும்.

பண்டிதர் S. S. ஆனந்தம்.

தைரிய முடைமை.

(வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.)

தேவர்கள் தாம் கடல் கடைந்ததினின்றுந் தோன்றிய இரத்தினங்களைக்கொண்டு திருப்தி யடைந்தார்களா? அப்போதுண்டாய காலகோடி விஷத்திற்குப் பயந்து பின்னடைந்தார்களா? தாங்கள் இச்சை கொண்ட அமிர்தத்தைப் பெறும் வரையில் தாங்கொண்ட முயற்சியைக் கைவிட்டார்களா? இல்லை. அதுபோலவே அறிவின் மிக்கோராய

தைரியங்கொண்டவர்கள் தாங்கொண்ட கருத்து நிறைவேறும் வரையில் தமது முயற்சியைத் தளரவிடார்.

இடையூறுகள் வந்தடுக்குமென்று பயந்து எவ்விஷயத்தையுஞ் செய்யத்தொடங்கார் கடையர். தொடங்கிய விஷயத்தை யிடையில் நேர்ந்த சிறிது தடையால் கைவிடுவர் மத்திமர். தொடங்கிய காரியத்தை யெவ்வகை யிடுக்கண்கள் வந்தடுத்தும் தாம் கொண்ட முயற்சியைக் கைவிடாது செய்து முடிப்பர் உத்தமர்.

ஒருவேளை நிலத்திற் சயனிப்பான், ஒருகால் மலர்ப் பஞ்சணையின் மிசை யுறங்குவான், ஒரு சமயம் காய் கனிகளைத் தின்று பசியாறுவான், ஒருகால் அறுசுவை யுண்டிக ளருந்துவான், ஒருவேளை கந்தைத் துணிகளை யுடுத்துக் காலங்கழிப்பான், ஒருசமயம் நல்ல வஸ்திராபரணங்களை யணிவான். இவ்விதம் தைரியமுடையவன் சுக துக்கங்களைப் பொருட்படுத்தாது தான்கொண்ட காரியத்தில் சித்தி பெறுவான்.

மற்றவர்கள் தன்னைப் புகழ்ந்தாலும் அன்றி இகழ்ந்தாலும், நிலையற்ற தன்மையைக் கொண்டுள்ள செல்வம் தன்னை வந்தடுத்தாலும், விட்டு அகன்றாலும், தனக்கு மரணம் சமீபித்துள்ளது என்று தெரிந்தாலும் தெரியாமலிருந்தாலும், தைரிய முள்ளவன் தனது நியாய மார்க்கத்தி னின்றும் ஒருநாளுந் தவறான்.

மைவிழி மாதர்தம் கடைக் கண்ணோக்கம் எவனை வெல்ல முடியாமலும், கொடுஞ்சினமென்னும் வெந்தணல் எவனது உள்ளத்தைக் கொளுத்தாமலும், அழுக்காறு அவா என்பன எவனை யணுகாமலும் அவனுக்கடங்கி யொழுகுமோ அவனே இவ்வுலகத்தை முற்றும் வெல்லும் ஆற்றலுடையவனாகிறான்.

அக்கினியைத் தாழ்த்திய போதிலும் அதனது சுவாலைகள் மேலெழும்புவதுபோல், தைரியவந்தன் எத்துணைத் தாழ்ந்த நிலைமை எய்தியபோதிலும் அவனது தைரியமென்னுங் குணம் தாழாது மேன்மேலோங்கும்.

மிக்க உயர்ந்த மலையினுச்சியி னின்றுங் கீழ்விழுந்து உயிர் துறப்பினும், பாம்பின் வாயிற் கையிடுதலினும், வெந்தணலின் மத்தியிற் குதித்திறப்பதினும் தனது ஒழுக்க நடையை விட்டு விகற்பமடைதல் கொடுமையாகும்.

நல்ல ஒழுக்கமும் நற்குணமு முடையவனுக்கு ஆழம் பொருந்திய ஆழியும் அற்பமாம். வெப்பத்தின் மிகுந்த வெந்தணலுஞ் சீதளமாம்.

உயரத்தி னுயர்ந்த மேருமலையுமே சிறுகல்லாம். சீற்றம் மிகுந்த சிங்கமும் சிறு மானும். விஷத்தின் மிக்க வெவ்வரவும் பூஞ்சரமாம். கொல்லுந் தகைமை வாய்ந்த கொடிய விஷமும் அமிருதமாம்.

மரம் வெட்டப்பட்டு மீண்டுந் தளிர்க்கும். சந்திரன் குறைவுற் றும் மீண்டும் நிறைவுறுவான். இவ் விதத்தை யுற்று நோக்கி, உடலழிந் துயிர் துறந்தவரைப் பற்றிச் சாதுக்கள் கவலைப்படார்.

செல்வத்திற்கு நல்லெண்ணங்கொண்டு துன்னருங் கேளிர் துயர் களைதலும், பராக்கிரம முடைமைக்கு மௌனமும், கல்வியைக் கற்ற தற்கு நீதியும், நற்புத்தியுடைமைக்குச் சாந்தமும், பணத்தைப் பெற்ற தற்குப் பரோபகாரமும், தேகபலம் வாய்ந்ததற்குப் பொறுமையும், எல்லா நற்குணங்களுக்கும் ஒழுக்கமுமே சிறப்புடையதாகும்.

என். வெங்கட்ரமணன்.

ஓரி.

இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன். சிற்றரசாய்க் கொல்லி மலையையும், அதனைச்சூழ்ந்த நாட்டினையும் அரசுபுரிந்துவந்தவன். இது:

"கொல்லி யாண்ட வல்வி லோரி" (புறம் 158)
"வல்வி லோரிக் கொல்லிக் குடவரை" (குறு. 100)
"பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகம் 208)
"மாரி வண்மகி ழோரி கொல்லி" (நற் 256)

என்பவற்றால் அறியப்படும். இம்மலையும், இதனைச் சார்ந்தநாடும், தற்காலம் சேலம் ஜில்லாவையடுத்த நாமக்கல் தாலுகாவில் இருக்கின்றன வென்பர். இம்மலை தேன்சொரியும் வளமிக்க தென்பது "கொல்லி மலைத் தேன்சொரியும் கொற்றவா" (கம்பர்) எனப் புகழ்ந்துள்ளதால் தெளிவாம். இத்தகைய வளஞ்சிறந்த மலையின் மேற்பக்கத்து, அழ கெலாந் திரட்டி ஒரு பெண் வடிவாகச் செய்து வைக்கப்பட்ட சிலையுரு வொன்று, இயங்கவும் நகைக்கவும் வல்ல சக்தி யூட்டப்பெற்றதாய்க் கண் டாரது கண்ணையுங் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து அவர்க்குப் பெருங் காம வேட்கையுறுவித்து இறுதியில் கொல்லத்தக்க தன்மையில் அமைக் கப்பட்டிருக்கின்றது என்றும்; இத்தகைய பெண்வடிவம் இம்மலையில் அமைக்க நேர்ந்த காரணம் யாதெனக் கவனிக்குமிடத்து, தங்கள் தவத் திற்குத் தகுதியான இவ்விடத்தில் இராக்கதரால் இடையூறு நேராவண்

ணம் தேவரும், முனிவரும் தனியேயிருந்து ஆராய்ந்து விசுவகன்மனைக் கொண்டு முடிக்கப்பட்ட தென்றும்; இத்தகைய ஜகன்மோகனப்படிவம் காற்று மோதியடித்தாலும், வலிய மழை விரைந்து வீசினலும், சினங்கொண்டு இடிமுழங்கி மோதினலும், இவைகளேயன்றி வேறுபல ஊறுபாடுகள் தோன்றினலும், பெரிய உலகமே சினங்கொண் டெதிர்த்தாலும் தனது எழிலுருவும் அமைப்பும் கெடாதவாறு தெய்வத்தால் அநுக்கிரகிக்கப்பட் டிருக்கின்றன வென்றும் அறிஞர் கூறுகின்றனர். இவ்வுண்மையை வலியுறுத்தற்கு நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு முதலிய சங்கச் செய்யுட்களும் தக்க சான்று கூறுகின்றன. அச்செய்யுட்கள் அடியில் வருமாறு:—

"பெரும்பூட் பொறையன் பேஎமுதிர் கொல்லிக்
கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை" (89 குறுந்தொகை)

" ... ... பொறைய
னுரைசா லுயர்வரைக் கொல்லிக் குடவயி
* * * *
றேனுடை நெடுவரைத் தெய்வ மெழுதிய
வினைமாண் பாவை" (நற் 185)

"கொல்லி நிலைபெறு—
கடவு ளாக்கிய பலர்புகழ் பாவை" (209 அகம்)

"பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப்
பூதம் புணர்த்த புதிதியல் பாவை" (192 நற்)

என வருவனவற்றால் கொல்லிப் பாவை தெய்வத்தால் ஆக்கப்பட்டதென்பதும்,

"செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்
தெய்வங் காக்குந் தீதுதீர் நெடுங்கோட்
டவ்வெள் ளருவிக் குடவரை யகத்துக்
கால்பொரு திடிப்பினுங் கதழுறை கடுகினு
முருமுடன் றெறியினு மூறுபல தோன்றினும்
பெருநிலங் கிளரினுந் திருநல வுருவின்
மாயா வியற்கைப் பாவை" (நற் 201)

என்பதால் அதன் எழிலுருவம் அழியாத இயல்பின தென்பதும் அறியப்பட்டன.

தன்னைக் கண்டாரைப் புன்னகையரும்பிப் போவல்புரிவித்துக் காமத்தால் நைந்து உயிர்விடுக்கச் செய்யும் திறத்தது என்பது:—

" ... ... திரிபுரத்தைச்
செற்றவனுங் கொல்லிச் செழும்பா வையுநகைக்கக்
கற்றதெல்லா மிந்நகை கண்டாயோ" (சித்திரமடல்)

"கூற்றுவன்வேல் போன்று குகன்வேலை வென்றகொலை
யாற்றலுறும் வன்க ணமர்விளைப்பத்—தோற்றமுறுங்
கொல்லிப்பா வைக்கிணையாய் நின்றதெவன் கோகனக
வல்லிப்பா வைக்கிணையா வாய்"

(மாறனலங்காரம். 2. செ. 15)

என வருவனவற்றால் உணரலாம்.

ஓரிக்குரிய இக் கொல்லிமலையை, கருவூர் அரசனும் வீரனுமான "பெருஞ்சேரல் இரும்பொறை" என்னும் வேந்தன் விரும்ப, அதனைப் பெறும்பொருட்டு, திருக்கோவலூர்க் காரிமன்னன், ஓரிமீது படையெடுத்துச் சென்று அவனைப் போர்முகத்தால் வென்று, அம்மலையைச் சேரனுக்கீந்து அவன் விருப்பத்தை நிறைவேற்றினன் என்ப.

இது:—

" ... ...செவ்வேன்
முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வி
லோரிக் கொன்று சேரலற் கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகம். 209)

என்பதால் அறியப்படும். இங்ஙனம் கொல்லிமலையைத் திருமுடிக்காரியால் சேரனுக்குக் கொடுத்தபின் இதனைப் "பொறையன் — கொல்லி" என வழங்கலாயினர். இச் செய்தி நற்றிணையிலும், அகநானூறு 213. 303. 338 வது செய்யுட்களாலும் நன்கு தெளியப்படும்.

ஓரிக்கும், காரிக்கும் போர் நிகழ்ந்த விஷயம்:—

" காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
வோரிக் குதிரை யோரியும்" (சிறுபா)

என்பவற்றால் புலனும்.

வள்ளன்மையால் சிறப்பு மிக்குடைய இவ்வோரி, மாற்றார் படையுடன் முனைந்து போ...த்தில் வீரனும், யுத்தப் பயிற்சியில் மிக்கானு

மாவ னென்ப. இது, "மழவர் பெருமகன் மாவள் ளோரி" (நற் 52) என்பதாலறிக.

தசரத மைந்தனாகிய இராகவன் வில்லாண்மையில் ஒப்புயர்வற்ற திப்பிய வீரனாக விளங்கிய காரணத்தால் இராமனை "வல்வில் இராமன்" என அறிஞர் புகழ்ந்து கூறியவாறு போல, ஓரியும், வில்வித்தையிலும், நாணேற்றி இலக்குத் தவறாதெய்யும் நிகரற்ற திறமையிலும், அத்தொழிலின் சாகஸத்திலும் வல்லானாக விளங்கிய காரணத்தால் இவனையும், வில்லாண்மையில் இராகவனுக்கு உவமைப்படுத்தி "வல்விலோரி" என்று புகழ்ந்து சிறப்பித்தனர் போலும்.

இவ்வள்ளல் இத்தகைய விற்றிறமையால் சிறப்பு மிக்கானென்பதற்குப் பல சான்றுகள் உளவேனும், உதாரணத்திற்காக, புறநானூற்றில் காணப்படும் செய்யுளொன்றை இதன் கீழ்த் தருகின்றோம் :—

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல ....
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்
புகழ்சால் சிறப்பி னம்புமிகத் திளைக்குங்
கொலைவன் யார்கொலோ! கொலைவன் மற்றிவன்
வில்வலன் போலான் வெறுக்கைநன் குடைய
ஞரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
சார லருவிப் பயமலைக் கிழவ
னோரி கொல்லோ?"

(பொழிப்புரை)

ஓர் யானையின்மீது முனிந்து ஓரி எறிந்த அம்பானது அவ்வேழத்தைக் கொன்று வீழ்த்தி, அருகிருந்த விரிந்த வாயையுடைய புலியையுந் தாக்கி, நீண்ட கொம்பினையுடைய மானையும் துடைத்துப் பெரிய தலையையுடைய பன்றியையும் பொன்றுவித்து, அவ்வளவோடமையாது, ஆழ்ந்த புற்றிற் கிடந்த உடும்பையும் சேதித்தது என்பதாம். என்னே! இவனது விற்றொழில்!

இத்தகைய நுணுகிய அஸ்திர வித்தையில் நிகரின்றிச் சிறந்து விளங்கியது போலவே, வள்ளன்மையிலும் மிக்கானாகித் திகழ்ந்த ஓரி,

"கைத்துண்டாம் போழ்தே கரவாதறஞ்செய்ம்மின்" "தோட்கோப்புக் காலத்தாற் செய்துய்ம்மின்" "கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன் உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே" என்னும் ஆன்றோர் அமுத மொழியினை உணர்ந்து கையிற் பொருளிருக்கும்போதே அறஞ் செய்ய வேண்டுமென்பதில் அவாக்கொண்டு புலவர்க்கும், இரவலர்க்கும், பாணர்க்கும், கூத்தருக்கும், பொன்னும், மணியும், பொருளும், மணித்திரளும், அணிவகைகளும், நிலமும், பொன்பட்டத்துடன் பூண் புனைந்த யானைகளும், வேணமட்டும் நல்கி, பின்னும் தேச வழி நடப்பார்க்கு இளைப்பாறுதற் பொருட்டுச் சாலை, சோலை, தடம், குளம், சத்திரம் முதலிய தர்ம கைங்கர்யங்களையும் செய்வித்துப் பெரும் புகழ்க்குரிய புண்ணியனாகத் திகழ்ந்தனன். இவன் இத்தகைய ஈகை நலத்தாற் சிறந்தானென்பதற்குச் செய்யுட்கள் அடியில் வருமாறு :—

"தன்மலைப் பிறந்த தாவி னன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரத்திடை நல்கி யோனே விடர்ச்சிமை
யோங்கிருங் கொல்லிப் பொருந
னோம்பா வீகை விறல்வெய் யோனே" (புறம் 152)

"மழையணி குன்றத்துக் கிழவ னாளு
மிழையணி யானை யிரப்போர்க் கீயுஞ்
சுடர்விடு பசும்பூட் சூர்ப்பமை முன்கை
யடுபோ ரானா வாத னோரி
மாரி வண்கொடை காணிய ....
*　　*　　*　　*
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வானார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு பெற்றனர்." (புறம் 153)

"...　　...　　...　　... ஓரி விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே" (புறம் 204)

என்பதாம்.

இதுவன்றி இந்த ஓரியின் பெருந்தன்மையும், கல்விமாட்சியும், வள்ளற்றன்மையும், அமுத குணமும், ஒழுக்க விசேடமும் இன்னும் விரிக்கில் நீளுமென்றஞ்சி இதோடு நிறுத்துகின்றனம்.

சி. த. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

கொல்லாமை.

(வெண்டாமரை ௬, இதழ் ௬, 142-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதுவரையுங் கொலைத் தீமை யுடையோர் நரகம் அநுபவிக்கு மிடத்துத் தத்தம் பாவத்தளவிற்குத் தக அவ்விடத்துண்டாகிய ஒரு பூத தேகத்தைப் பொருந்துவர் என்று சாதிக்கப்பட்டது. இனி அன்னிய மதத்தினரின் ஆட்சேபங்களுக்குச் சமாதானங்கூறிய சைவசித்தாந்தியின் கூற்றை எடுத்துச் சொல்வாம். உலோகாயத மதத்தினரின் ஆட்சேபங்களுக்குச் சமாதானம் வருமாறு:

சொப்பனத்தின்கண் வேறொருசரீரம்வந்து பொருந்துமென்றது பழுது. ஏனெனில் கனவிலே தோன்றுவதெல்லாம் நனவின்கட் கண்டும் கேட்டுமுள்ள நினைவாகுமே எனின், நம்முடைய சரீரத்துக்கு ஒருகாலும் ஆகாயத்திற் பறக்குந்தன்மை யின்மையானும், கனவின்கண்ணே தோன்றிய சரீரத்திற்கு ஆகாயத்திற் பறக்குதல் இயல்பாய்ப் புதுமையும் அதிசயமுந் தோன்றக் காண்டலினாலும், பிரமாவாதியாகிய தேவதைகளுக்கு உண்டாகிய பலமுக முதலிய உறுப்புக்கள் நமக்குக் கனவின்கண் உண்டாகாமையானும், சொப்பனதேகத்தை நாம் கண்டு கேட்டிருந்தமையால் அதுபற்றி உளவாகிய நினைவுகளல்ல. சொப்பனத்தின்கண் வேறொருதேகம் உளதாகுமென்பதே உண்மை. அப்படியானால், ஒரு ரத்தினத்தினது காந்தி மற்றொரு ரத்தினத்திற்சென்று பொருந்த வேண்டும். அஃதின்மையால் வேறொரு தேகமென்பதன்று, இத்தேகத்தின் குணமெனல் வேண்டும். அதுபோல இச்சரீராந்தத்தில் இதனுடைய குணமாகிய அறிவு வேறொரு சரீரத்திற் சென்று புகுவதுமில்லை. ஒன்றின் குணம் ஒன்றிற் சென்று புகாதெனினும், இங்ஙனமுண்டாகிய அறிவு இத்தேகத்தின் குணமன்று. இத் தேகத்தின்கண் கன்மவசத்தாற் பொருந்தியிருந்துள ஆன்மாவினுடைய குணமே. அப்படியானால், இத்தேகத்தின்கண் இதற்கு அன்னியமாய் ஒரு சீவனுண்டென்பது கூடாது அஃதேனெனில், இங்ஙனம் காணப்பட்டுள்ள பிருதிவி - அப்பு - தேயு - வாயு என்னும் இந்த நான்கு பூதமும் நித்தியமாயுள்ளன. அவற்றுள் வாயு சலன குணத்தை யுடையது. ஆகையால் மற்றுள பூதங்கட்கு அதனோடு கலப்புண்டாகுதலின், இச் சரீராதிகள் தோன்றும். அப்படித்தோன்றின வென்பது எதனாற் கண்டதென்னில், மண் கடினமாயிருத்தல்போல், சரீரத்தில் என்பு தோலாதிகள் கடினமாய் மலர் தடித்து வீழ்தலினாலும், சலம் நெகிழ்ந்து ப[illegible]ஞ்செய்தலின், இரத்

தாதிகள் நெகிழ்ச்சி யுடையனவாய்ச் சலம் வீழ்தலினாலும், நெருப்புச் சுட்டு ஒன்றுவித்தலின், உதராக்கினி அன்னபானாதிகளைச் சுட்டொன்றுவித்துச் சரீரத்தின்கண் வெப்புத்தோன்றுதலினாலும், வாயுச் சலித்துத் திரட்டுதலின், இச்சரீரத்துக்கு ஓடுதலாதி சலனத்தைப் பண்ணி நாசியாதிகளின் இயங்கக் காணுதலினாலும், அந்தப் பூதக்கலப்பு இந்தச்சரீரமென்பது பிரத்தியட்சம். பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு மூன்றுங்கூட்டினவிடத்தில் ஒரு சிவப்புத் தோன்றுதல்போல, பூதசையோகத்தினால் முன்பில்லாத மனமுந் தோன்றும் இதுவன்றி இந்தச்சரீரத்தில் ஆன்மா உண்டென்னில், இப்படிப் பிரத்தியக்ஷமாகக் காணவேண்டும். அப்படிக் காணப்படாமையின், ஆகாசத் தாமரைப் பூவும் முயற்கொம்பும் ஆமைமயிர்க்கம்பலமும் மணலிற்றைலமும் உண்டென்பதையொக்கும். ஆகையால், ஆன்மா உண்டென்பதே யில்லை. இவ்விடத்துத் தோன்றும் உணர்வெல்லாம் தேககுணமே எனின், தேகம் பிணமாய்க்கிடக்கும் அவதரத்தில் உணர்வை அங்ஙனம் கண்டிலேம். ஆதலின், அவைகள் நீங்கியது உண்மையே. நீங்குதலின், சரீரத்தின்கண் அறியாமையடையும். அப்படியானால், பிணமானகாலையில் நீங்குமென்ற வாயு உறக்கத்தின்கண் நீங்காமே யிருக்கவும், அப்பொழுது தேகத்தின்கண்ணே பாம்பு எறிவருதலையும், சத்துரு வருதலையுஞ் சரீரம் அறியாமே கிடத்தலால், வாயுநீங்க அறிவு கெடுமென்பது கூடாது. ஆதலின், கன்மவசத்தால் அவத்தைகடோறும் ஒடுங்கியும் உணர்ந்தும் வருவானோர் ஆன்மா உளனென்று அறியக்கிடக்கின்றது.

இதுவரையும் சரீரமே ஆன்மாவென்னும் உலோகாயத மதத்தை மறுத்துச் சரீரத்துக்கு அன்னியமாய் ஒரு ஆன்மா உண்டென்றும் அது இம்மைக்கண் செய்த கொலைத் தோடத்தைச் சரீராந்தத்தில் வேறொரு தேகத்தைப் பொருந்தி நரகத்தில் அனுபவிப்பது உண்டென்றும் சாதித்தது.

இனி எசுமதத்தினரின் ஆட்சேபங்களுக்குச் சமாதானம் வருமாறு. கொலையாற் பாவம் உண்டென்பது ஒக்குமெனினும், எல்லாக் கொலையாலும் பாவம் உளதென்பது கூடாது. அஃது எங்ஙனமெனின், மனிதரை மனிதன் கொன்றால், கொன்றவன் நரகத்தழுந்துவன். அஃது உண்மை. மிருகாதிகளைக் கொன்றதனால் பாவம் உண்டென்பதில்லை. அஃதேனெனில், மிருகாதிகளை மனிதருக்கு உபகாரமாகக் கர்த்தா படைத்தார் எனின், மலத்தின்கண் ஈயால் உண்டாகிய நுண்ணிய புழுவும் மற்றும் பரமாணுவினும் நுண்ணிய செந்துக்களும் என்ன பிரயோச

னத்துக்கு உதவும். அவைகள் அப்பிரயோசனம். அப்படியானால், கருத்தா ஞானமயனென்பது கூடாது. ஏனெனின், சீவன்களிலே சிறியவைகளெல்லாம் பெரியவைக்கு இரையாய் ஒன்றற்கொன்று வேண்டியிருத்தலின், எவையும் பாரம்பரியத்தில் மனிதருக்கு உபகாரமாகப் படைத்தனவே. அப்படியானால், மனிதருக்கு உபகாரமாகப் படைத்த மிருகவர்க்கத்துள் சிங்கம்-புலி-யானை-கரடி-பாம்பு-தேள் முதலியவைகள் மனிதருக்கு இதப்பிரயோசனத்துக்கு வாராமல் வருத்துதலும், கொல்லுதலுஞ் செய்தலால் உபகாரமாகப்படைத்ததென்பதுகூடாது. ஏனெனின், கருத்தா ஆதியிலே ஒரு மனிதனைப் படைத்து மிருகாதிகளும் அடங்குவனவாகச்செய்து இன்னபடி நடவென்று ஒருபுத்தியுங்கூற; அவன் அந்தப் புத்தியின்வழி நடவாமல் தவறு செய்தலால் மிருகாதிகள் உனக்கு அடங்காமற்போகவென்று கர்த்தா சபித்தலின், அவனுக்கும் அவனது சந்ததியாகிய மனிதருக்கும் அடங்காமற்போயின. அப்படியானால், ஆடு மாடு எருமை பன்றி நாய் கோழி முதலிய சில சீவன்கள் மனிதருக்கு அடங்கக் காண்டலின் சபித்தது பொய்யேயாம். சாபந் தவறிற்றென்னில் கருத்தா அசத்தனும். ஆதலிற் சபித்ததேயில்லை. ஏனெனின், மனிதருக்குப் புலியாதிகள் அடங்காமலும் மாடு முதலிய அடங்கவும் கருத்தாவினது சாபமே. அப்படியானால், ஒருகாலத்திற் பாம்பு முதலியன ஒருவனுக்கு அடங்குதலினாலும் பசுமுதலியன ஒருவனைக் கொல்லுதலினாலும் மனிதருக்கு உபகாரமாக மிருகாதிகளைப் படைத்ததேயில்லை எனின், கருத்தா பட்சவாதியாம்; ஏனெனின் சர்வ சீவன்களையும் ஒருபடித்தன்றி ஊர்த்தயோனியாகவும் திரியக்குயோனி யாகவும் படைத்தமையால் என வறிக. அப்படி யல்ல. ஆன்மாக்களெல்லாம் ஒருவருக்கொருவர் அநாதி சென்மாந்தரங்களிற் செய்த இதாகிதங்களாலுண்டாகிய புண்ணிய பாவத்தினாலே இங்ஙனஞ் சொல்லப்பட்ட சராசர வடிவங்களைப் பொருந்துதல் சத்தியம். ஆதலின் ஏசுமதத்தினர் கூற்றுச் சரியன்று என்பது தெளிக.

இதற்குப் பிரமாணம்: திருவாசகம்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்"

என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

இதுவரையும் கடவுள் மனிதருக்கு உபகாரமாக மிருகாதிகளைப் படைத்தா ரென்பது அசத்தியம் என்றும், ஆன்மாக்கள் கன்மத்தால் நானுரூபம் பெற்றன சத்தியம் என்றும் கூறியதென வறிக.

(தொடரும்)

ந. கண்ணுச்சாமிப்பிள்ளை,
சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை.

பரமபத சோபானம்.

(வெண்டாமரை சு, இதழ் எ, 163–ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்தப் பயங்கரமான ஸம்ஸார துக்க நிவர்த்திக்கும் பரம ஸுக பிராப்திக்கும் யாதொரு ஸாதனமும் வேண்டுவ தில்லை. எந்த வான் மாவை மறந்ததனால் அகோரமான இச்சம்ஸாரதுக்கம் தோன்றிக்கொண் டிருக்கின்றதோ அவ் வான்மாவை யறிவதனாலேயே ஸர்வ மங்களமும் ஸ்வதஸித்தமாகவே யிருக்கின்றது. அன்றியும் இதற்கு,

"போதோன்ய ஸர்தனேப்யோஹி ஸர்க்ஷாத் மோக்ஷைக ஸாஸனம்
பாகஸ்ய வன்ஹிவத் ஞானம் விணுமோக்ஷ நஸித்யதி"

(ஆத்மபோதம்.)

என்னும் பரமாசாரியர் வாக்கே சான்று.

இவ்வளவு அனர்த்தங்களுக்கும் மூலகாரணம் இரண்டு. ஒன்று, ஸதானந்த ஸ்வரூபமான தன்னிலை யறியாமை, மற்றொன்று, பரம்பொருளாம் தன்னை "நான் தீனன், துக்கி, மூடன், ஏழை, அன்று பிறந்தேன், நாளை இறக்கப்போகிறேன், நான்பாபி, கஷ்டப்படுகிறேன், ரோகி, இளைத்துவிட்டேன்" இவை முதலான பாவனைகளால் துன்பத்திற் காளாக்கிக் கொள்ளுதல். முதலில் தன் நிலை மறந்தமைக்கு அவித்தை யென்றும் தன்னை வேறொன்றாய்க் கொண்டமைக்கு அசுப வாஸனை யென்றும் பெயர். * இவ்வசுபவாஸனையை நீக்குவதே நாம் மேன்மையை யடைவதற்கு முக்யமாய்ச் செய்யவேண்டிய கடமை. அசுபவாஸனையின் சேர்க்கையால் அந்தக்கரணமானது கலக்கமடைந்து மலின மனதென் னும் பெயருடன் சுகதுக்கங்களைத் தசேந்திரியவாயிலாக அம்மலின மனதைச் சுத்தப் படுத்துவதற்கு (அதாவது அசுப வாஸனையை நீக்குவதற்கு)

* இதனையே வேதாந்த சாஸ்திரங்களில் அவித்தையின் (1) ஆவரணசக்தி யென்றும், (2) விக்ஷேப சக்தி யென்றும் வகுத்துணாப்பர் பெரியோர்.

சுப வாஸனைகளைப் புகட்டவேண்டும். துணிகளின் அழுக்கைப் போக்கு வதற்கு எவ்விதம் சாணிப்பால், மண் முதலியவைகளில் அவைகளை ஊற வைத்துப் பிறகு சுத்த ஜலத்தைக்கொண்டு தகுந்த கல்லில் தோய்க்க வேண்டுமோ அவ்விதமே, அந்தக்கரணத்தின் மலினத்தன்மை நீங்குவ தற்கு, மைத்ரியாதி சுப வாஸனைகளைப் புகட்டிப் பின்பு, ஸாதுஸங்கம், ஸத்குரு உபதேச மிவ்விரண்டின் உதவியால் அசுபவாஸனையும் அதனுடன் சுப வாஸனைகளையும் நீக்கவேண்டும். இங்ஙனம் ஸகல வாஸனைகளி னின்றும் நீங்கப்பெற்ற அந்தக்கரணத்திற்கு அறிவென்று பெயர். தெளிந்த நீரில் பிரகாசிக்கும் பூர்ண சந்திரன்போல் இவ்வறிவில் ஸ்வயம் பிரகாசமாயும், நித்யமாயுமுள்ள நிரதிசயானந்த வான்மா (யாதொரு அபேக்ஷையுமின்றி) தானே பிரகாசிக்கும்.

ஆகையால் மஹத்தான சோகக் கடலைக் கடந்து பரம க்ஷேமத்தை யடைவதற்கு முக்யமாய் நம்மனத்தைச் சுத்தி செய்து கொள்வதைவிட வேறு யாதொன்றும் வேண்டுவ தில்லை. சித்த சுத்தியின் பொருட்டுப் பெரியோர்கள் சாஸ்திரங்களையும், இதிஹாஸ புராணங்களையும், ஆகம விதிகளையும், பக்தி மார்க்கங்களைப் புகட்டும் தேவாலயங்களையும், யக்ஞ, ஹோமாதி கர்மாக்களையும், யோக சாஸ்திரங்களையும், ஞான நூல்களையும், மற்றும் பல மார்க்கங்களையும் அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு அமைத் துள்ளார். இவைகளில் எதனைக் கைக்கொள்ளினும் சித்த சுத்தி யுண்டா மென்பதில் சிறிதும் ஐயமில்லை. யாவும் அந்தக்கரண மலின வாஸனையை நீக்குவதற்காக ஏற்பட்டவைகளே. ஆனால், இதில் ஒரு சூது இருந்து கொண்டு நம்மெல்லோரையும் ஏமாற்றி வருகின்றது. எங்ஙனம், துணி யின் அழுக்கை நீக்குவதற்காக ஏற்பட்ட சாணிப்பாலும், உவர் மண்ணும் அவ்வழுக்குடன் துணியினின்றும் நீங்கிவிட வேண்டியதோ, அழுக்கு நீங்கினபிறகு எப்படித் துணியில் அவைகளை வைத்துக்கொள்ள விரும் பார்களோ அவ்வாறே, மலின வாசனையை நீக்குவதற்காக மேற்சொல்லிய சுப வாஸனைகளை மேற்கொள்ள வேண்டுமேயன்றி, அம்மலின வாஸனை கள் நீங்கியபின்னும் இச்சுபவாஸனைகளையே மேற்கொள்வோமாகில், மலின வாஸனைகளால் ஒருவனுக்கு ஞானத்தையடைய எவ்வளவு பிரதி பந்தமுண்டோ அவ்வளவு பிரதி பந்தமும் சுபவாஸனைகளாலேயே உண் டாய்விடும். அதிகம் சொல்வானேன். சில ஸமயங்களில் மலினவாஸனை யுடன் கூடின மூடனைத் திருப்பி மெய்யறிவைப் புகட்டினாலும் புகட்ட லாம். சுப வாஸனைகளில் அத்யந்தாஸக்தியுடைய வித்வானைத் திருப்பு வது மிகக்கடினமென்பதை அனுபவத்தில் விசேஷமாய் நாம் காணலாம். கர்மம், பக்தி, யோகம் என்னும் மார்க்கங்களில் அதி தீவிரமாய் உழைத்து,

ததனுகுணமாய் ஏற்படும் சரீரவாஸனை, லோகவாஸனை, சாஸ்த்ரவாஸனை யென்னும் முத்தழும்பேறின பல அறிஞர்களே, அவைகளைத் தங்கள் சித்தசுத்தியின் பொருட்டும், தத்வாரா ஆத்மஞானத்தின் பொருட்டும் ஏற்பட்ட யுக்தி ஸாதனங்களாகக் கருதாமல், தாமடையக் கோரும் பரம புருஷார்த்தமாக எண்ணிப் பல்கால் வருந்திக் கரைகாணாமல் மடிந்தன ரெனின், அறிவற்ற எம்மைப்பற்றி இங்குக்கூறவும் வேண்டுமோ? மாத் தின்மேலுள்ள கனியைப் பறித்துண்ண விரும்பி ஒருவன் ஏணி வைத் துப் பாதி ஏறுவதற்குள் பழத்தின்மேல்வைத்திருந்த லக்ஷ்யத்தை விடுத்து, “ஓ, ஏணியே, உன் தயவாலன்றோ நான் இவ்வளவு உயரம் ஏறினேன். நீயல்லவோ தீங்கனி நல்கும் தயாளு. இனி என் ஆயுள் உள்ளளவும் உன்னைவிட்டு க்ஷணமும் அகலேன்” என்று அதன் பழுவ்வை (படியை)ப் பிடித்துக்கொண்டு எவ்வளவு காலம் தொங்கிக்கொண்டிருந்தாலும் பிர யோஜனம் என்ன? பழத்தையடைவதற்கு ஏணி ஒரு ஸஹாயமேயன்றி, புருஷப் பிரயத்தனமன்றி ஏணியே பலன்கொடுக்குமோ? அவ்வேணி யைச் சாதனமாய்க்கொண்டு மிதித்துக் கீழே தள்ளத்தள்ள, நாம் ஒவ் வொருபடியாய் உன்னதபதவி யடையலாம்.

(தொடரும்.)

M. V. சுப்ரமண்ய ஐயர்,
Pakala.

பல சரக்குக் கடை.

புதுவையின் கால நிலைமை.

மழை யின்மையால் வருந்திய புதுவையில், இறைவனருளால் இப் போது பெரு மழை பெய்துவருகிறது. பலரை வாயிற் போட்டுக் கொண்ட இன்புளுவேன்சா என்ற சுரநோயும் பெரிதும் தணிந்துவிட் டது. மேல்நாட்டில் சமாதானம் செய்துகொள்வதற்குச் சண்டை நிறுத் தப்பட்ட செய்தி கிடைத்ததும், நெடுநாள் பட்ட வருத்தமெல்லாம் அப் பொழுதே அகன்றுவிட்டது போலாயிற்று. உணவுப் பொருள்களும் துணி மணிகள் முதலியனவும் இனி எளிதிற் கிடைக்கும் என்ற நம்பிக் கையால் யாவரும் ஒருவாறு களிப்படைகின்றனர்.

பிறர் வருந்த மிக்க ஊதியம் பெற்றுத் தாம்மட்டும் வாழவேண்டும் என்று எண்ணியிருந்த சிலர்க்கு, மழைபெய்ததும் சண்டை நின்றதும் மிக்க வருத்தத்தை விளைத்திருக்குமே! என்செய்யலாம்!

சண்டை நிறுத்தப்பட்ட செய்தி கிடைத்ததும், புதுவை வாசிகள் அடைந்த களிப்பிற்கு அளவில்லை. அன்றும் அடுத்த ஞான்றும் பெரு விழாக். கொண்டாடப்பட்டது. எங்குப் பார்த்தாலும் கொடிகள் பறந்தன. நகரமாளிகை (Etatcivil) விளக்குகளாலும் கொடிகளாலும் அலங்கரிக் கப்பட்டது. விளக்கு வரிசைகளின் இடையில் போர்ச்சேவகர்கள் அணி வகுத்துச் செல்ல நகர மாளிகையினின்றும் பல கொடிகளைப் பிடித்துக் கொண்டு மகாசனங்கள் ஊர்வலம் வந்தார்கள். வாத்திய முழக்கமும், மக்கட் கூட்டத்தின் மகிழ்ச்சிப் பெருங்கூச்சலும், அலைகடல் ஒலியை யும் அடக்கி யெழுந்தன. செய்தி கிடைத்த செவ்வாய்க்கிழமைப் பிற் பகலிலும் புதன்கிழமையிலும் பள்ளிக்கூடங்கட்கு விடுமுறை கொடுக் கப்பட்டது. புதன்கிழமை உத்தியோக சாலைகட்கெல்லாம் விடுமுறை.

1919-ம் ஆண்டுத் தொடக்க முதற்கொண்டே மகா சனப் பிரதி நிதிகளைத் தெரிந்தெடுத்தல் (Election) பல நடக்குமென்று சொல்லப் படுகிறது.

*
* *

சிவகங்கை ஸ்ரீ சுப்ரமண்ய அபிநவ சச்சிதாநந்த சுவாமிகள்.

சாதுர்மாசிய பூசையை முடித்தற்பொருட்டும் சரீர சௌக்கியத் தின்பொருட்டும், ஸ்ரீமான் கலவை. சுப்பராய செட்டியார், ஸ்ரீமான் ஈப்பூர். கிருஷ்ணசாமி செட்டியார் முதலியவர்கள் ஆதரவில், புதுவை எல்லப்பிள்ளைச் சாவடியிலுள்ள ஷை கலவை. சுப்பராய செட்டியார் பங்க ளாத்தோட்டத்தில் வந்து தங்கியிருந்த சிவகங்கை ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்மடத்து ஸ்ரீ சுப்ரமண்ய அபிநவ சச்சிதாநந்த சுவாமிகள், வியாச பௌர்ணமி பூசையை முடித்த பின்னர், ஏற்கெனவே தமது உடம்பி லேற்பட்டுள்ள நோயினால், காலயுக்தி ௵ புரட்டாசி ௴ ௨௬ உ சனிக்கிழமையன்று பரிபூரணதசை யடைந்துவிட்டார்கள். சுவாமிகளுக் குக் குருபூசை முதலியன நடைபெற்றதும், ஏற்கனவே இளவரசுப் பட் டத்துக்கு வந்துள்ள சிறிய சுவாமிகளும் மற்றைய பரிவாரங்களும் புது வையைவிட்டுப் போய்விட்டார்கள்.

*
* *

காலஞ்சென்ற புராணிகர் செல்லதுட்டியாசாரியார்.

ஆரணியிலும், சென்னை புதுவை முதலிய பல விடங்களிலும் புராணப் பிரசங்கங்கள் செய்து பலரைக் களிப்பித்தவரும், செருக்கு முதலிய தீக்குணங்கள் அற்றவரும், அடக்கம் பொறுமை முதலிய அருங் குணங்கள் உற்றவரும், மிக நல்லவரெனப் பெயர் பெற்றவருமாகிய வித்துவான் செல்லதுட்டி ஆசாரியார், காலயுக்தி ௵ ஐப்பசி ௴ ௭ உ

புதன்கிழமையன்று ஆரணியில் சிவபதம் அடைந்தனர் என்பது கேட்க மனம் பெரிதும் வருந்துகின்றது. அவரது பிரிவு, ஆரணி வாசிகட்கும் வெளியூர் அன்பர்கள் பலர்க்கும் மிக்க வருத்தத்தை விளைத்திருக்கும். அவரது குடும்பத்தார்க்கு நமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

பட-ர்.

* * *

காலஞ்சென்ற உபாத்தியாயர் சேஷ-சடகோப ஐயர்.

புதுவைக் கலைமகள் கழகத்தின் அவயவிகளுள் ஒருவராகிய உபாத்தியாயர் சேஷ-சடகோப ஐயர் தேகவியோகம் அடைந்தனர். கழகம் ஏற்பட்ட நாள் முதற்கொண்டு அதன் அங்கத்தினராக இருந்த அவரது பிரிவால் கலைமகள் கழகத்தார் பெரிதும் வருந்துகின்றனர். ஐயரது குடும்பத்தார்க்கு எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

தி. திருப்புளிசாமி ஐயர்,
காரியதரிசி.

சேலம் விவேகாநந்த வித்யாசிரமம்.

இவ் வாசிரமத்தின் வருடபூர்த்திக் கொண்டாட்டம், (16–11–18) சனிக்கிழமை, சேலம் காலேஜ். பிரின்ஸிபால், பிரம்மஸ்ரீ S. K. எக்ய நாராயண அய்யர். M. A. அவர்கள் அக்கிராசனத்தின் கீழும், 17–11–18. ஞாயிற்றுக்கிழமை, ராயகோட்டை மிட்டாதாரும், ஹைகோர்ட்டு வக்கீலுமான ஸ்ரீமான் R. M. லோகநாத முதலியார் B. A. B. L. அவர்கள் அவ்வைத்தலைமையின் கீழும், பலபண்டித வித்வசிரோமணிகளது பல அரிய உபன்னியாசங்களுடன் நடைபெற்றது. இவ்வாசிரமமானது, சநாதன இந்து மதத்தை நிலைநாட்ட அமெரிக்காக் கண்டத்தில் சிகாகோ நகரத்தில் சர்வமத மகாசபையில், இந்துமதத்தைப் பற்றிப் பிரசங்கித்து ஜயசீலராய்த் திரும்பிவந்த மகான் சுவாமி விவேகாநந்தரின் கொள்கைகளை அநுசரித்து நடந்துவருகிறது.

இவர் கொள்கைகளின்படி நடத்த முன்வந்திருக்கும் இவ்வாசிரமத்தின் தலைவரும், தேசோபகாரியுமான ஸ்ரீமான் K. துரைசாமி அய்யர் அவர்களுக்கும், உதவித்தலைவர் ஸ்ரீமான் M. V. கோபால செட்டியார் அவர்களுக்கும், பொதுஜன நன்மைக்காகத் தமது பொருளை அளவிடாது செலவழித்து வருபவரும், இவ்வாசிரமத்தின் மானேஜருமான ஸ்ரீமான் S. M. பத்பனும செட்டியார் அவர்களுக்கும், தேகசிரமத்தைச் சிறிதும் பாராது பெரிதும் பயனுற உழைத்துவரும் புத்தக சாலையின் காரியதரிசி ஸ்ரீமான் V. M. சித்தையா அவர்களுக்கும், ஆசிரமத்தை வைத்து நடத்தக் கட்டடத்தை விட்டிருக்கும் ஸ்ரீமான் அங்கமுத்து

நாயக்கர் அவர்களுக்கும், கடவுள் நீண்ட ஆயுளையும் அழியாத செல்வத்தையும் தந்து அரோக திடகாத்திரராய் வாழ அருள்செய்யும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பெரிதும் பிரார்த்திக்கின்றேன்.

கண்டு களிப்பெய்திய S. V. N. ஆழ்வார்.

மதிப்புரை.

உருத்திராக்க விளக்கம்.

விலை அணா 4. கிடைக்குமிடம்: காரியதரிசி, சைவ சமயாபி விருத்திசபை, செங்கல்பட்டு.

இந்நூலை நாம் படித்துப் பார்த்தோம். இது ஒழுக்கநூல் பிரிவில் 2-வது ஆகும். இதில் உருத்திராக்கத்தைப் பற்றிய அரிய பெரிய பொருள்கள் பல அறியக்கிடக்கின்றன. வெறும் புராணம்போலன்றி, மருத்துவநூல் முறையாகவும், பௌதிக (Science) நூல் முறையாகவும் உருத்திராக்க வரலாற்றினை இந்நூல் விளக்குகிறது.

(1) உருத்திராக்கம் அணியவேண்டிய ஆவசிகமும், (2) அதன் உற்பத்தியும், (3) அதன் வகையும் பெயரும் காரணமும், (4) அதன் குணமும் பலனும், (5) அணியும் காலமும் இடமும் முறையும் பலநூலாதாரங்களோடு விளக்கப்படுகின்றன.

உருத்திராக்கம் என்பது தமிழ்மொழியே யென்றும், உரு-|-திரம்-|-ஆக்கம் என்று பிரிந்து, "உடலுக்குத் திரமாய் எப்பொழுதும் ஆக்கத்தைக் கொடுப்பது" என்பது அதன் பொருளென்றும் பல நியாயம் காட்டி இந்நூல் கூறுகின்றது. அதனைப் புதுமையாகவே இதனுட் காண்கின்றோம். அஃது எவ்வண்ணமாயினும் ஆகுக. இக்காலத்து மக்கள் அறிவிற்கேற்றபடி மருத்துவநூல் வாயிலாகவும் பௌதிகநூல் வாயிலாகவும் உருத்திராக்கத்தின் குணமுதலியன விளக்கப்பட்டிருப்பது சாலப் பயன் தரத்தக்கதே. ஆதலின் இந்நூலை ஒவ்வொருவரும் பெற்றுப் படித்துப் பயன்பெற வேண்டுமென்பதே எமது விருப்பம்.

இந்நூலாசிரியர், ஆதிசைவ பரம்பரையில் வந்த துடிசை கிழார் அ. சிதம்பரனார் M. T. A. S., M. T. S., & M. S. S. C. என்பவர். இவர் சைவ சித்தாந்த நூற்பயிற்சியும், ஆங்கில, ஸம்ஸ்கிருத நூற்பயிற்சியும், சரித்திர, ககோள, பூகோள, வைத்திய, சோதிட, பௌதிக நூற்களின் பயிற்சியும் உள்ளவரென்பது, இவரியற்றிய நூலைப் படிப்பார்க்கு நன்கு விளங்கும். இவரது நூலாராய்ச்சியும் நுண்ணறிவுடைமையும் அறிஞர் பாராட்டத் தக்கனவே. இந்நூலையும் இன்னோரன்ன வேறு நூல்களையும் இயற்றித்

தந்த இந்நூலாசிரியர்க்கும், பலர்க்கும் பயன்படுமாறு அவற்றை யச்சிட்டு வெளிப்படுத்திய செங்கல்பட்டுச் சைவ சமயாபிவிருத்தி சபையார்க்கும் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இந்நூலை நம் பார்வைக் கனுப்பிய இதனாசிரியர்க்கு எமது நன்றியை யனுப்புகின்றோம். ப—ர்.

ஆரணி வித்துவான் ஸ்ரீமான் சேல்லதட்டி ஆசாரியாரவர்கள்
சிவைக்கிய மானதை முன்னிட்டு,
காமக்கூர் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் மு. சுந்தர முதலியார்கூறிய

இரங்கற் பாக்கள்.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

தெருவிளையா டல்புரியுஞ் சிறுவர்முத லோர்மிகவுந் தெள்ளிவாய்க்கேட்டுக்
கருவிளையா டலையொழிக்க நவநவமாய் நயம்பெருகக் கருதிச்சொன்ன
திருவிளையா டலைநிகரச் செல்லகுட்டி நாவலனே சிவலோகத்திற்
பெருவிளையா டலையுணரச் சென்றனையோ வன்பொடுநீ பேசுவாயே. (1)

பன்னாட்டுப் புலவர்களில் வல்லவர்கள் யாவரெனப் பார்க்கும்போது
முன்னாட்டுஞ் செல்லகுட்டி நாவலனே யிவ்வுலக மூன்றுஞ்சொல்லுந்
தென்னாட்டுத் தமிழைநவ ரசம்பெருக நாமணக்கச் செப்புதற்குப்
பொன்னாட்டுக் கேகினையோ மறுபடியுந் திரும்புவையோ புகலுவாயே.()

சத்தகஞ்சேர்முனிவர்முதற் பெரியோர்கள்ஞானமெழுதிச்சரையில்வைத்த
வித்தகஞ்சேர் நூற்களெலாமுறையாகப்படித்துணர்ந்து வெறுத்துவிட்டுச்
சித்தகஞ்சேர் சிவபெருமான் சீவர்கள்மேற் கருணையொடு செய்தமேலாம்
புத்தகங்கள் வாங்கிவரச் சென்றனையோ செல்லகுட்டிப் புலவரேறே. (3)

காக்கைதனக் கிரையாகும் பிறவியினி லனுதினமுங் கடியபற்பல
பூக்கையொடு சிவலிங்க பூசைபுரி பெரும்பயனால் பொறுத்தநாற்ற
ஆக்கையறச் சிவலோகஞ் சென்றதுவு மடுக்குநய மடைந்தவுன்றன்
நாக்கையெவ ரிடங்கொடுத்தாய் செல்லகுட்டிநாவலனே நவிலுவாயே. (4)

கல்லாமற் கிடந்தவர்கள் கதியடையக் கதைசொரியுங் காரேபூவில்
நில்லாமற் போனதையென் னுந்தோறு மனக்கொதிப்பு நீளுதையா
எல்லாரு மிருக்கட்டு மன்பாயுன் னுடனிருந்த வெங்களுக்குச்
சொல்லாமற் போனதென்ன செல்லகுட்டிநாவலனே சொல்லுவாயே.(5)

செல்லகுட்டி யாயிருந்தாய் பெற்றவர்க்குப் புலவருக்குத் தினகரன்போல்
வல்லகுட்டி யாயிருந்தாய் மற்றவர்க்கு மண்மீது மாசிலாத
நல்லகுட்டி யாயிருந்தா யிப்பொழுது சிவனுடைய நளினப்பாதம்
புல்லகுட்டி யாயிருந்தா யுனைப்போன்ற கெட்டியுளார் புவியில்யாரே.(6)

பல கண்காட்சிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பருய், ஆயுர்வேத
ஔஷதசாலை,
ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

அம்பர் :—இந்த சுகந்தத்தில் கொஞ்செடுத்து உடுப்புகளுக்கு போடலாம் தேகத்திற்கும் பூசலாம். முகத்தில் தடவிவந்தால் பருக்கள், கருப்பு புள்ளிகள், மேகப்படர், மாசு, அறிப்பு முதலியதுகள் நீங்கி முகத்திற்கு வசீகரத்தை தரும். வெற்றிலையில் தடவி தாம்பூலத்துடன் உபயோகித்தால் மிக்க மனோ உற்சாகத்தைத் தரும். கொஞ்சமெடுத்து வெந்நீரில் கலந்து ஸ்நானம் செய்தால் வெந்நீரெல்லாம் சுகந்த பன்னீர் வாசனையுள்ளதாகும் மனக்களிப்பையுண்டாக்கி தேஹசிரமத்தை யாற்றும். விலை டப்பா ஒன்றுக்கு அணா 8. ஒன்று முதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

உடுப்புகளுக்கு விலாசம் போடும் அழியாத மை அல்லது இங்கி.

பருத்தி, கம்பளி, பட்டுமுதலிய,வஸ்திரங்களில் எவ்வளவு தடவை வஸ்திரங்களை துவைத்தாலும் அல்லது வெளுத்தாலும் விலாசம் எக்காலத்திலும் அழியாது. இந்த மையினல் விலாசம் போட்டால் உடுப்புகளை திருட்டுப் போகாமலும், மாற்றுப்படாமலும், காக்கலாம். விலை சீசா 1க்கு அணா 8. வி. பி. சிலவுகள் 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

சர்க்கரையின் பில்லைகள்.

சர்க்கரையைவிட 500 பங்கு தித்திப்பு ஜாஸ்தியாயுள்ள சர்க்கரையின் என்ற இந்தவஸ்து சிறுபில்லைகளாக எமக்காக ஸ்பெஷலாக சீமையிலிருந்து தயாருக்கப்பட்டு தருவித்து விற்கப்பட்டு வருகிறது. ஒரு சேர் பால் அல்லது காபி அல்லது தேயிலைக்கு ஒன்று அல்லது இரண்டு பில்லைகள் உபயோகித்தால் ஒரு பிடி சர்க்கரையை உபயோகித்தால் எவ்வளவு மதுரமும், இனிப்புமிருக்குமோ, அவ்வளவு தித்திப்பைத் தரும். சர்க்கரையையே உபயோகிக்கக்கூடாத மதுமூத்திரரோகிகளுக்கும், சர்க்கரையை உபயோகிப்பதனால் மதுமூத்திரம் வந்துவிடும் என்று அச்சப்படுகிறவர்களுக்கும், "சர்க்கரையின்" மிகவும் உபயோகமுள்ள வஸ்து சர்க்கரையைவிட விலை சாசம். சர்க்கரையின் தூர்க்குணத்திற்கு பயந்து அநேகர் சர்க்கரையில்லாமலே காபி, தேயிலை, பாயசம், முதலிய பானங்கள் சாப்பிடுவதுண்டு. அப்பேர்க்கொத்தவர்களுக்கு "சரக்கரையினின்" உபயோகம் இவ்வளவுதான் என்று கணக்கிடமுடியாது. சீசா 1-க்கு அணா 8. வி. பி. சிலவு 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

தஞ்சாவூர் மசாலா பவுடர்:— ஸ்தாவர வர்க்கத்தைச் சேர்ந்த வாசனை வஸ்துக்களைக்கொண்டு செய்யப்பட்ட மனோரம்மியமான கலவைபவுடர். சைவாளும் மாம்ஸதாரிகளும் குழம்பு, கறி, துகையல் முதலிய இன்னும் எல்லாவித சமையல் பதார்த்தங்களில் உபயோகித்தால் அவைகளின் ருசி மனதைக் கவரச்செய்யும். இதை உபயோகித்தால் நீடித்த அக்கினிமாந்தம் அருசி முதலியது குணப்பட்டு சாப்பாடு உட்கொள்ள ஆவலை உண்டாக்கும். இப்மசாலாவை சேர்த்துசெய்தசமையலின் மனோரம்மியமானவாசனை வீடுமுழுவதுமட்டுமல்ல, வெளியில் சுற்றுப்பக்கங்களிலும் பாவும். இதை பிராமணர்களும் மற்றவர்களும் யாதொருதடையுமில்லாமலும் தங்கள் தங்கள் ஆசாரத்திற்கு ஹானியில்லாமலும் நிஸ்ஸந்தேகமாய் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8. 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப வி-பி-சிலவு அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY.

AYURVEDIC PHARMACY,

Sri Venkatesa Perumal Koil Sannathy

TANJORE.